சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

<u>முன்னிலை</u> : - **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ம் நாள் சனிக்கிழமை

**<u>REA.No.02/2025</u>**

**<u>இன்</u>**

**<u>நிறைவேற்று மனு எண்.24/2018</u>**

1. திருநாவுக்கரசு
2. தெய்வம்

... மனுதாரர்கள்/தீர்ப்புக்கடனாளிகள்

**//எதிராக//**

ரீட்டா ... எதிர்மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர்

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 07.03.2026 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்கள்/தீர்ப்புக்கடனாளிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.கே.ஏ.ரேவதி,பி.ஏ.,பி.எல்., மற்றும் திரு.கே.அர்ஜுனன்,பி.ஏ.,பி.ஏ.,எல்.எல்.பி., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.ராஜா,பி.எஸ்.சி.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

1. மேற்படி மனுவில் 23.03.2022 ம் தேதியில் ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி டிகிரியை ரத்து செய்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 105 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்கள்/தீர்ப்புக்கடனாளிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்கள்/தீர்ப்புக்கடனாளிகள் தரப்பில் தாக்கல் செய்த மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்: -</u>**

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.03.07 16:36:51 +0530

(i) தான் மேற்படி நிறைவேற்று மனுவில் மனுதாரர் /தீர்ப்புக்கடனாளி ஆவேன் என்றும், இதே அபிடவிட் 2-ம் மனுதாரர் தீர்ப்புகடனாளிக்கும் போதுமானது என்றும், எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் தன்மேல் மேற்படி நெம்பரில் மனு தொடர்ந்து அந்த மனு 23.3.2022 தேதியில் தாங்கள் ஆஜராகாத காரணத்தால் எக்ஸ்பார்ட்டி டிகிரி ஏற்பட்டுள்ளது என்றும், தான் குடும்பத்துடன் கோயம்புத்தூரில் சென்று வேலை நிமித்தமாக அங்கேயே தங்கி வேலை பார்ப்பதால் நாதான் மேற்படி நீதிமன்ற நோட்டீஸ் மற்றும் உத்திரவுகளை வாங்க இயலாமல் போய்விட்டது என்றும், மேலும் கடந்த நான்கு வருடங்களாக கொரோன நோய் தோற்று காரணமாகவும் ஆரம்ப காலகட்டத்தில் கொரோன தொற்றால் போடப்பட்ட லாக்டவுன் காரணமாக போக்குவரத்து இல்லாத காரணத்தாலும் தன்னால் தனது சொந்த ஊருக்கு வர இயலாமல் போய் விட்டது என்றும்,

(ii) மேலும் இந்த ஏக்ஸ்பார்ட்டி டிகிரி விவரம் தற்போதுதான் ஜப்தி நோட்டீஸ் கிடைத்து சுமார் 10 நாட்களுக்கு பின் வழக்கறிஞரை அணுகிய 01.07.2022 ம் தேதியில் தான் தனக்கு தெரியவந்தது என்றும், மேலும் கொரோனா காலத்தில் உயர்நீதிமன்றத்தால் காலவரையறை நீட்டிக்கப்பட்டுள்ளது என்றும், இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல தமது சக்திக்கு அப்பாற்பட்டு ஏற்பட்டுவிட்டது என்றும், ஆகவே கனம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து மேற்படி 23.3.2022 தேதியில் ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி டிகிரியை ரத்துசெய்து நீதி செலுத்த வேண்டியது அவசியமும் நியாயமும் ஆகும் என்றும், இல்லாவிட்டால் தனக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பும் பெருத்த கஷ்ட நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதாரர்கள்/தீர்ப்புக்கடனாளிகள் தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

3. <u>எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையின் சுருக்கம்: -</u>

(i) மனுதாரர் மனு பொய் மோசம், சட்டப்படியும், நியாயப்படியும் செல்லதக்கதல்ல.



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.07 16:36:54 +0530

முதல் நிலையில் தள்ளுபடி ஆக கூடியது. இந்த எதிர்மனுதாரர் உக்தமாய் ஒதுதுக் கொண்ட சங்கதிகளை தவிர மற்ற யாவற்றையும் மனுதாரரே நிருபிக்க கடமைப்பட்டராவர்.

(ii) மனுதாரர் மனு அபிடவிட் பாரா 2-ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் முற்றிலும் தவறானதாகும். 23.03.2022-ம் தேதியில் நிறைவேற்று மனுவில் ஏற்பட்ட உத்தரவின் போது இந்த மனுதாரர்கள் குடும்பத்துடன் கோயம்புத்தூரில் இருந்ததாகவும், நீதிமன்ற நோட்டீசை வாங்க இயலாமல் போய்விட்டது என்பதும், கடந்த நான்கு வருடங்களாக கொரோனா காலம் போக்குவரத்து இல்லாத காலம் என்பதாலும் சொந்த ஊருக்கு வர இயலாமல் போய்விட்டது என்பது முற்றிலும் தவறான தகவலாகும். மனுவிற்காக கூறும் பொய் காரணங்களாகும். மனுதாரர் மனுவில் கூறும் காரணங்களுக்கு எவ்வித ஆவணங்களையும் ஒப்படைக்கவில்லை. மற்றும் எக்ஸ்பார்ட்டி டிகிரி விவரம் ஜப்தி நோட்டிஸ் கிடைத்த பிறகு தான் தெரியவந்தது என்பது முற்றிலும் தவறான தகவலாகும். ஜப்தி நோட்டிஸ் இந்த மனுதாரர்களுக்கு நேரடியாக சர்வு செய்யப்படவில்லை. மேற்படி நோட்டிசை இந்த மனுதாரர்கள் பெற்று கொள்ளாமல் தலைமறைவாகிவிடுவதும், 3-ம் நபர்களை கொண்டு ஆள் இல்லை என நீதிமன்ற அமினாவிடம் சொல்லிவிடுவது போன்ற சட்ட விரோத செயலில் ஈடுபட்டு வந்தார்கள். நீதிமன்றத்தில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வையும் நன்கு அறிந்திருந்த மனுதாரர்கள் நிறைவேற்று மனு சொத்தை ஜப்தி செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டு ஜப்தி செய்யப்பட்ட பிறகு ஜப்தி உத்தரவை தெரிந்து கொண்டு எதுவுமே தெரியாதது போல் இம்மனுவை தொடர்ந்துள்ளார்கள். மேற்படி நீதிமன்றத்தில் உத்தரவு ஏற்பட்ட காலம் கொரோனா முடிவுற்ற காலமாகும். இந்த எதிர்மனுதாரர்/DH-க்கு செலுத்த வேண்டிய பணத்தை ஏமாற்றவே பொய்யான காரணத்தை கொண்டு மனு தொடர்ந்துள்ளார்கள்.

(iii) மனுதாரர்கள் மேற்படி நிறைவேற்று மனுவில் இந்த மனு தொடர எவ்வித



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.07 16:36:57 +0530

சட்டப்படியான உரிமையும் இல்லை. மனுதாரர்கள் சட்ட விரோதமக இம்மனுவை தொடர்ந்துள்ளார்கள். மனுதாரர்கள் அசல் வழக்கின் தீர்ப்பின் பேரிலோ (அ) நிறைவேற்று மனு உத்தரவின் பேரிலோ எவ்வித மேல் முறையீடும் செய்யவில்லை. மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் மேற்படி நிறைவேற்று மனுவில் இன்றுவரை எதிருரை தாக்கல் செய்யவில்லை. எதிருரை தாக்கல் செய்யாமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது சட்ட விரோதமானதாகும். இம்மனு முதல்நிலையிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். மனுதாரர் இம்மனுவை உரிய காலத்தில் தாக்கல் செய்யவில்லை.

(iv) மனுதாரர்கள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அனுகவில்லை. நீதிமன்ற நேரத்தை வீணடிப்பதற்காகவே இம்மனுவை தொடர்ந்துள்ளார்கள். எதிர்மனுதாரர்/DH பெண் என்பதால் அவருக்கு சேரவேண்டிய பணத்தை ஏமாற்ற வேண்டியும் வழக்கை தொடர்ந்து உயிர்பித்து கொண்டு இருக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தொடர்ந்துள்ளார்கள். ஆகவே கனம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்து நீதி வழங்க வேண்டும் என்றும் எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தனது பதிலுரையில் கூறியுள்ளார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

**<u>தீர்வு</u>** :-

**5.** மேற்படி மனுவில் 23.03.2022 ம் தேதியில் ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி டிகிரியை ரத்து செய்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 105 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்கள்/தீர்ப்புக்கடனாளிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.** மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி தரப்பு வழக்கறிஞர் மனுவில் கண்டுள்ள சங்கதிகளை



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.07 16:36:59 +0530

குறிப்பிட்டு வாதிட்டார். எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பு வழக்கறிஞர் பதிலுரையில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் தன்மேல் மேற்படி நெம்பரில் மனு தொடர்ந்து அந்த மனு 23.3.2022 தேதியில் தாங்கள் ஆஜராகாத காரணத்தால் எக்ஸ்பார்ட்டி டிகிரி ஏற்பட்டுள்ளது என்றும், தான் குடும்பத்துடன் கோயம்புத்தூரில் சென்று வேலை நிமித்தமாக அங்கேயே தங்கி வேலை பார்ப்பதால் நாதான் மேற்படி நீதிமன்ற நோட்டீஸ் மற்றும் உத்திரவுகளை வாங்க இயலாமல் போய்விட்டது என்றும், மேலும் கடந்த நான்கு வருடங்களாக கொரோன நோய் தோற்று காரணமாகவும் ஆரம்ப காலகட்டத்தில் கொரோன தொற்றால் போடப்பட்ட லாக்டவுன் காரணமாக போக்குவரத்து இல்லாத காரணத்தாலும் தன்னால் தனது சொந்த ஊருக்கு வர இயலாமல் போய் விட்டது என்றும், மேலும் இந்த ஏக்ஸ்பார்ட்டி டிகிரி விவரம் தற்போதுதான் ஜப்தி நோட்டீஸ் கிடைத்து சுமார் 10 நாட்களுக்கு பின் வழக்கறிஞரை அணுகிய 01.07.2022 ம் தேதியில் தான் தனக்கு தெரியவந்தது என்றும், மேலும் கொரோனா காலத்தில் உயர்நீதிமன்றத்தால் காலவரையறை நீட்டிக்கப்பட்டுள்ளது என்றும், இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல தமது சக்திக்கு அப்பாற்பட்டு ஏற்பட்டுவிட்டது என்றும், ஆகவே கனம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து மேற்படி 23.3.2022 தேதியில் ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி டிகிரியை ரத்துசெய்து நீதி செலுத்த வேண்டியது அவசியமும் நியாயமும் ஆகும் என்றும், இல்லாவிட்டால் தனக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பும் பெருத்த கஷ்ட நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதாரர் தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது.

**7.** எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில், மனுதாரர்கள் மேற்படி நிறைவேற்று மனுவில் இந்த மனு தொடர எவ்வித சட்டப்படியான உரிமையும் இல்லை என்றும்,



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.07 16:37:02 +0530

மனுதாரர்கள் சட்ட விரோதமக இம்மனுவை தொடர்ந்துள்ளார்கள் என்றும், மனுதாரர்கள் அசல் வழக்கின் தீர்ப்பின் பேரிலோ (அ) நிறைவேற்று மனு உத்தரவின் பேரிலோ எவ்வித மேல் முறையீடும் செய்யவில்லை என்றும், மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் மேற்படி நிறைவேற்று மனுவில் இன்றுவரை எதிருரை தாக்கல் செய்யவில்லை என்றும், எதிருரை தாக்கல் செய்யாமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது சட்ட விரோதமானதாகும் என்றும், இம்மனு முதல்நிலையிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியதாகும் என்றும், மனுதாரர் இம்மனுவை உரிய காலத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரர்கள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அனுகவில்லை என்றும், நீதிமன்ற நேரத்தை வீணடிப்பதற்காகவே இம்மனுவை தொடர்ந்துள்ளார்கள் என்றும், எதிர்மனுதாரர்/DH பெண் என்பதால் அவருக்கு சேரவேண்டிய பணத்தை ஏமாற்ற வேண்டியும் வழக்கை தொடர்ந்து உயிர்பித்து கொண்டு இருக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தொடர்ந்துள்ளார்கள் என்றும், ஆகவே கனம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

**8.** இருதரப்பு வாதங்கள் மற்றும் வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 21 விதி 106(2)ன் கீழ் தாக்கல் செய்து 23.03.2022 ம் தேதியில் ஏற்பட்ட எக்ஸ் பார்ட்டி டிகிரியை ரத்து செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தன்மேல் மனு தொடர்ந்து 23.03.2022 ம் தேதியில் தான் ஆஜராகாத காரணத்தினால் எக்ஸ் பார்ட்டி டிகிரி பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், தான் குடும்பத்துடன் கோயம்புத்தூரில் வேலைக்கு சென்று வேலை நிமிர்த்தமாக தங்கிவிட்டதாலும், நீதிமன்ற நோட்டீஸ் வாங்க



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.07 16:37:04 +0530

இயலாமல் போய்விட்டதாகவும், மேலும் கொரோனா நோய் தொற்று காரணமாகவும், கொரோனா தொற்றால் போடப்பட்ட லாக்டவுன் காரணமாகவும் போக்குவரத்து இல்லாததால் சொந்த ஊருக்கு வர இயலாமல் போய்விட்டதாகவும், அதனால் எக்ஸ் பார்ட்டி டிகிரி விவரம் தனக்கு தெரியவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. வழக்கு ஆவணங்களை பரிலீசனை செய்து பார்க்கும்போது இந்த மனுவில் 23.03.2022 ம் தேதியில் எக்ஸ் பார்ட்டி டிகிரி எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. இந்த நிறைவேற்று மனுவானது 22.08.2017 ம் தேதியிட்ட தீர்ப்பாணையை அனுசரித்து தாவா தொகை ரூ.1,45,000/-த்திற்கு வட்டியுடன் சேர்த்து மொத்த தொகை ரூ.2,34,738/-ஐ மனு சொத்தை விற்பனை செய்து வசூலிக்க வேண்டும் என்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அ.வ.எண்.22/2013 ல் 22.08.2017 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் அடிப்படையில் தான் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள்/தீர்ப்புக்கடனாளிகள் வழக்கறிஞர் வைத்து வழக்கை நடத்தி முழு விசாரணைக்கு பிறகு தான் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. நிறைவேற்று மனுவில் உரிய அறிவிப்பு அனுப்பப்பட்டு அந்த அறிவிப்பு மனுதாரர்கள்/தீர்ப்புக்கடனாளிகளுக்கு சார்பாகவில்லை என்பதால் நாளிதழ் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு தாவா சொத்து பற்றுகை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. அவ்வாறு உத்தரவிடப்பட்டதற்கு பிறகு உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 21 விதி 106(2)ன் கீழ் மனு தாக்கல் செய்ய வேண்டுமென்றால் 30 நாட்களுக்குள் மனுதாரர்கள்/தீர்ப்புக்கடனாளிகள் மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். அவ்வாறு மனு தாக்கல் செய்யாமல் இந்த வழக்கில் ஏதோ எக்ஸ் பார்ட்டி டிகிரி பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அதனை ரத்து செய்ய வேண்டும் என்றும், 11.07.2022 ல் முதன் முதலில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 30 நாட்களுக்குள் இம்மனு தாக்கல் செய்யாததால் முதல் தோற்றத்திலேயே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது. மேலும் மனுதாரர் கூறியுள்ளது



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.07 16:37:07 +0530

போல் 23.03.2022 ம் தேதியில் எக்ஸ் பர்ட்டி டிகிரி இல்லாததாலும் இம்மனு தள்ளுபடி செய்யக்கூடியது. மேலும் மனுதாரர்/தீர்ப்புக்கடனாளிகள் கோயம்புத்தூரில் வேலை பார்த்தார் என்பதற்கும், கொரோனா நோய் தொற்றின் காரணமாக எங்கும் செல்ல முடியவில்லை என்பதற்கும் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. இம்மனுவை அனுமதிப்பதற்கு சட்டப்படியான எந்த முகாந்திரமும் இல்லாததாலும், நிறைவேற்று மனுவில் காலதாமதம் ஏற்படுத்துவதற்காக வேண்டி தான் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக இந்நீதிமன்றம் கருதுவதால் நீதியின் நலனை கருத்தில் கொண்டு இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**9. இறுதியாக**, மேற்படி மனுவில் 23.03.2022 ம் தேதியில் ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி டிகிரியை ரத்து செய்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.03.07 16:37:10 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

**<u>இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>** : -

-- இல்லை -

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.03.07 16:37:12 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.